[27th June 1957

*14 *Q.*—SRI N. K. PALANISAMI AND SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Bill for granting protection to beedi workers has been finalised; and

(*b*) if so, when it will be introduced in the Assembly?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) The Bill has not yet been finalised.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI: இந்த பில் குறித்து ஏற்கனவே கிளர்ச்சிகள் நடந்திருக்கிறது. ஆறு மாதங்களுக்கு முன்பே கொண்டு வருவதாக கனம் மந்திரி அவர்கள் வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். இப்பொழுது சிபார்சுகள் வந்ததற்குப் பிறகு இரண்டு மாதத்திற்குள் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்,

THE HON. SRI R. VENKATARAMAN: ஆறு மாதங்களுக்கு முன் நான் மந்திரியாக இல்லை. அந்த பில் "கமிஷனர் ஆப் லேபர்" அவர்கள் பரிசீலனையில் இருக்கிறது. இதில் பல சட்டப் பிரச்னைகள் இருக்கிறபடியால் நன்றாக ஆராய்ந்து இதைத் தயாரிக்கவேண்டும். இல்லாவிட்டால் இதனால் ஏற்படக்கூடிய சிக்கல்கள் காரணமாக அடிக்கடி கோர்டுக்குப் போகவேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, கால தாமதம் ஆனாலுங்கூட, இது நன்றாக யோசித்துக் கொண்டுவரப்படும்.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware of the fact that beedi workers are exploited by the rich employers?

THE HON. SRI R. VENKATARAMAN: I know it very well. That is why we are bringing in this bill.

SRIMATHI T. N. ANANDANAYAKI: அந்த மசோதாவைத் தயாரிக்கும் போது பீடித் தொழிலாளர்கள் அழைக்கப்பட்டு அவர்களின் கஷ்டங்களை நேரடியாகப் புரிந்துகொள்வதற்கு அமைச்சர் தக்க ஏற்பாடுகள் செய்வார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN: இதைத் தெரிந்துக் கொள்வதற்காக "ஸ்பெஷல் ஆபீஸர்" நியமித்து பரிசீலனை செய்து ரிப்போர்ட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பில் தயாரித்தானதும் பிரசுரிக்கப்படும். அப்போது தொழிற் சங்கங்கள் ஏதாவது சொல்லவேண்டியிருந்தால் அதையும் சர்க்கார் கவனிக்கும்.

SRI K. RAMACHANDRAN: பில் தயாரிக்கப்பட்டு "கமிஷனர் ஆப் லேபர்" அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா, அல்லது அவரது அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: இதனுடைய முறையை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். "டிராப்ட்" தயார்செய்து சம்பந்தப்பட்ட பல இலாகாக்களுக்கு அனுப்பப்படுகிறது. இலாகாக்களிலிருந்து வருகிற அபிப்பிராயத்தை ஒட்டி மறுபடியும் அதைத் திருத்தி அது சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு மீண்டும் அனுப்பப்படும்.

SRI N. K. PALANISAMI: இப்போது "ஸ்பெஷல் ஆபீஸர்" கொடுத்த சிபார்சுகளை எல்லோரும் வரவேற்கிறார்கள். கனம் மந்திரி அவர்கள் சொல்லும்போது, தயாரிப்பில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று

27th June 1957]

சொன்னார்கள். ஆகவே, சிபார்சுகளில் ஏதாவது விடப்படுமா, அல்லது அத்தனை சிபார்சுகளையும் ஏற்றுக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இது குறித்து என்னால் முன்கூட்டியே ஒன்றும் சொல்வதற்கில்லை.

SRI S. B. ADITYAN : பீடித் தொழிலாளர்கள் எனப்படுவதிலே பீடி "பிராஞ்ச் மானேஜர்" களும் இருக்கிறார்களே, அவர்களும் பாது காப்பிற்குள் வருவார்களா ? அல்லது, அவர்கள் வேலையை இழக்கக்கூடிய நிலைமை வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் முன்பே இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று சொன்னேன். கனம் அங்கத் தினர் அவர்கள் சொன்ன விஷயம்கூட ஒரு சிக்கல்தான். இதையும் பரிசீலனை செய்துதான் முடிவு செய்யப்படும். பில் பிரசுரிப்பதற்குமுன் ஒன்றும் சொல்வதற்கில்லை.

SRI V. K. KOTHANDARAMAN: முன்பு, பீடித் தொழிலாளர்களுக்கு ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டபோது, மத்திய அர சாங்கத்தின் அனுமதி வேண்டுமென்று சொல்லப்பட்டது. இப்போது இது கமிஷனருடைய பரிசிலனையில் இருந்து வருகிறது என்று சொல்லப் படுகிறது. மீண்டும் மத்திய அரசாங்கத்தின் அனுமதி வேண்டுமென்று சொல்லப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த மசோதாவைத் தயாரித்து கொண்டுவரும் முறையை நான் விளக்கமாகச் சொன்னேன். பல இலாகாக்களுக்கு அனுப்பி அவர்கள் அபிப்பிராயத்தை கேட்டு, கடைசியாக எந்த இலாகா அதைத் தயாரிக்கவேண்டுமோ அதற்கு அனுப் பப்படுகிறது. இதனால், ஆரம்பபூர்வமாக செய்யப்படவேண்டிய பல காரியங்கள் செய்யப்பட்டுவிட்டன என்று பொருள்.

Godavari river water for Madras State.

***16 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to get water from Godavari river ?**

THE HON. SRI P. KAKKAN : Yes, the Chief Minister of Madras had discussions with the Chief Minister and the Deputy Chief Minister of the former State of Andhra on this question.

SRI N. K. PALANISAMI : இந்தமாதிரி தண்ணீர் எடுத்துக் கொள்வ தற்கு அவர்கள் அனுமதித்துவிட்டார்களா ? அப்படி அனுமதித்து இருந் தால், இந்த விஷயத்தில் சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய நட வடிக்கைகள் என்னென்ன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : நமது சென்னை மாகாணத்தின் முதல் மந்திரி அவர்களும், ஆந்திர மாகாண முதன் மந்திரி அவர்களும் உதவி முதன் மந்திரி அவர்களும் கூடிப்பேசி இருக்கிறார்கள். இதற் குள்ளாக, இந்த சமயத்தில் ஒன்றும் சொல்ல முடியாது. அவர்களும் இந்த மாகாணத்திலிருந்து பிரிந்து சென்றதால் அவர்களுக்கு நிலைமை தெரியும். இரண்டு சர்க்கார்களும் கலந்து ஆலோசித்து நல்ல முறையில் முடிவு செய்யும்.

SRI P. S. CHINNADURAI : கோதாவரித் தண்ணீர் இந்த ராஜ்யத் திற்கு கொண்டுவரப்படும்போதாவது கோயம்புத்தூர் ஜில்லாவில் பாதிக்கப் பட்ட தாலூகாக்களும் இதனால் பலன் அடையுமா ? அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்குமா ?